மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதுகுறித்து ஏற்கெனவே பேசியாகிவிட்டது.*

திரு. S. சதாசிவம்: *மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாமல் இருந்தாலும், அது முக்கியமான கேள்வி; மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கின்ற. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சட்டமன்றத் தீர்மானம் நிறைவேற்றி, ஒன்றிய அரசு முடிவு செய்கிற விஷயம். தொழிற்சாலை குறித்து கேளுங்கள். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை நாங்கள் புரிந்துகொள்கிறோம். ஆனால், பொதுவாகக் கேள்வி நேரத்தில் கொள்கை சார்ந்த முடிவுகளை அறிவிப்பதில்லை என்பது இந்த மன்றத்தினுடைய மரபு. எனவே, அது கொள்கை சார்ந்த முடிவாக இருப்பதால், நான் இப்போது அதற்குப் பதில் சொல்வது பொருத்தமாக இருக்காது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 149, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நா. எழிலன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

149—

குடியிருப்புகள்

***51686—டாக்டர் நா. எழிலன்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆயிரம் விளக்கு தொகுதி, கோடம்பாக்கம், புலியூரில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 12]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சென்னை கோடம்பாக்கம், புலியூர் பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் நீண்ட நாட்களுக்கு முன்பாகக் கட்டி விற்கப்பட்ட வீடுகள் மிக மோசமாக பழுதடைந்துள்ளன. அதை மறு கட்டுமானம் செய்து தர வேண்டுமென்பது அங்கிருக்கக்கூடிய மக்களுடைய கோரிக்கையாக இருக்கிறது. வீட்டு வசதி வாரியம் அதற்கான உதவியை செய்வதற்குத் தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நா. எழிலன் அவர்கள்.*

டாக்டர் நா. எழிலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாட்டு முதல்வர் தன்னுடைய அரசியல் பயணத்தைத் தொடங்கிய தொகுதி, ஆயிரம் விளக்கு தொகுதி, முத்தமிழறிஞர் கலைஞர் வாழ்ந்த பகுதி, பேரறிஞர் அண்ணா வாழ்ந்த பகுதி. அந்தப் பகுதியில் கடந்த வாரம் 7 ஆம் தேதி, கோடம்பாக்கம் பகுதியில் ஆய்வு செய்து, மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றும் விதமாக பதில் அளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதன் தொடர்ச்சியாக புலியூர் கால்வாய் பக்கத்திலிருக்கிற* Puliyur Canal *குடியிருப்பு என்பது 423 குடியிருப்புகள் உள்ள பகுதி. 40 ஆண்டுகளுக்கு முன்பாக அதனை மூன்று வகையாகப் பிரித்துள்ளார்கள். 64 மேல்தட்டு குடியிருப்புகள், 128 நடுத்தரக் குடியிருப்புகள், 231 பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கான குடியிருப்புகள் எனப் பிரித்துக் கொடுத்துள்ளார்கள். இப்போது மிகவும் சேதமடைந்த நிலையில் மறு கட்டுமானங்களுக்கு உத்தரவிட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதன் தொடர்ச்சியாக, Mambalam, Tank Bund Road, *அதாவது* South Boag Road*-ல் வீட்டு வசதி வாரியத்தின் 544 குடியிருப்புகள் சுமார் 3 ஏக்கர் நிலப் பரப்பில் உள்ளன. அதன் கட்டுமானம் முடிந்து 46 வருடங்களாகியுள்ளன. கட்டுமானங்களுக்கான அரசு, நம் அரசு; திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி மக்கள் நம்பிக்கையை பெற்ற*

அரசு நம் அரசு; அந்த நம்பிக்கையின்பால் MTB தொகுப்பில் 544 குடியிருப்புகளுக்குப் புதிய கட்டுமானங்களைக் கட்ட அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைபோன்ற ஒரு கோரிக்கை வந்தபோதுதான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு அது சென்றது. அதைப்பற்றி எங்கள் துறையினுடைய ஆய்விலே அதனைக் குறிப்பிட்டு அவர்கள் சொன்னார்கள். இதுபோல எங்கெங்கு இருக்கிறதோ அதையெல்லாம் உடனடியாகக் கட்டித் தருவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும். காரணம், அவை இடிகின்ற தருவாயில் இருக்கின்ற காரணத்தால் உயிருக்கு ஆபத்து எதுவும் வந்துவிடக் கூடாது என்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலேதான் ஏறத்தாழ 10 இடங்களிலிருந்து வந்த கோரிக்கைகளை வைத்து அவையெல்லாம் ஆய்வு செய்யப்பட்டிருக்கின்றன. இப்போது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்வது 11-வது இடம். எனவே, அதையும் சேர்த்து ஆய்வு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கின்றோம். ஆனால், அதிலே நிறைய சிக்கல்களும் இருக்கின்றன. காரணம், அங்கே குடியிருப்பவர்கள், குறைந்தபட்சம் two third majority, அதற்கு ஒப்புதலைத் தர வேண்டியிருக்கிறது. அந்தச் சட்டத்தைக்கூட இப்போதுதான் நாம் கொண்டு வந்திருக்கிறோம். அதற்காக இப்போது விதிமுறைகள் உருவாக்கப்படுகின்றன. நீண்ட நாட்களாக இந்தக் கோரிக்கை செய்யப்படாமல் இருந்தது. நம்முடைய அரசு வந்த பின்னால்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன பின்பு அதற்கான தனிச் சட்டம் இயற்றி, இப்போது ஏறத்தாழ 5 இடங்களிலே அந்தப் பணிகளைத் துவக்குகின்ற தருவாய்க்கு நாங்கள் வந்திருக்கிறோம். எனவே, அதையும் விரைவாகச் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நா. எழிலன் அவர்கள்.

2023 ஏப்ரல் 12]

டாக்டர் நா. எழிலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம் விளக்கு தொகுதியில் அமைந்துள்ள இந்தக் குடியிருப்புப் பகுதியின் மக்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து, சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் அவர்களிடம் பேசி, அனைவரிடமும் ஒப்புதல் பெற்று, இந்தத் திட்டத்தை முழு வீச்சில் நடைமுறைப்படுத்துவதற்காக நான் முனைப்புக் காட்டுவேன் என்று உறுதியளிக்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 150, மாண்புமிகு உறுப்பினர் திரு. A. நல்லதம்பி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

150—

தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம்

***15277—திரு. A. நல்லதம்பி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டு வரும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்குக் கணினிப் பயிற்சி பெற்ற பணியாளரை நியமனம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கூட்டுறவுத் துறையின்கீழ் தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டுவரும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு கணினிப் பயிற்சி பெற்ற ஒரு பணியாளரை தனியே நியமனம் செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A. நல்லதம்பி அவர்கள்.*

திரு. A. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். தமிழ்நாட்டில் கணினி புரட்சிக்கு வித்திட்டவர்*